**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 47** **நாள்: 21.02.2019**

# பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரப் பதாகைகள் அமைப்பதில் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றுதல் தொடர்பான அரசியல் கட்சி பிரமுகர்களுடனான கூட்டம் ஆணையாளர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழக அரசின் சார்பில் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் அரசியல் கட்சி பிரமுகர்களுடன் விளம்பரப் பலகைகள் மற்றும் தட்டிகள் அமைக்க மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்ற அறிவுறுத்தும் வகையில் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் அமைப்பதில் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றுதல் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் டிஜிட்டல் பேனர் பிரிண்டிங் அச்சக சங்க உறுப்பினர்களுடனான கூட்டம் ஆணையாளர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.02.2019) ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் ஆகியவற்றை அமைக்க மாநகராட்சியிடம் அனுமதி பெற்று, விதிமுறைகளுக்குட்பட்டு அமைக்க வேண்டும் எனவும், விதிகளை மீறியும், அனுமதியின்றியும் விளம்பரப் பலகைகள் அமைப்பவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஆணையாளர் அவர்களால் செய்தி வெளியீடுகள் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், விதிகளை மீறியும், அனுமதியின்றியும் விளம்பரப் பலகைகள் அமைத்தவர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், டிஜிட்டல் பேனர் பிரிண்டிங் சங்கம் மற்றும் சங்க உறுப்பினர்கள் விளம்பரப் பலகைகள் மற்றும் தட்டிகள் அமைக்க ஒவ்வொரு விண்ணப்பத்தாரரும் படிவம்–1யை பூர்த்தி செய்து அனுமதி கோரும் நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் தடையின்மைச் சான்று, அமைக்கப்பட உள்ள இடம் தனியார் கட்டிடமாகவோ, அரசு நிறுவனம் சார்ந்த கட்டிடமாகவோ இருந்தால் அவர்களிடமிருந்து அதற்கான தடையின்மைச் சான்று, அமைக்கப்பட உள்ள இடத்திற்கான வரைபடம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும்,

ஒவ்வொரு அனுமதிக்கும் (விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள்) அனுமதி கட்டணம் ரூ.200/–க்கான வரைவோலை (Demand Draft) மற்றும் ஒவ்வொரு அனுமதிக்கும்

காப்பீட்டுத் தொகை ரூ.50/–க்கான வரைவோலை ஆணையாளர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் சமர்ப்பிக்கவும்,

விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சாலையின் அகலத்தை பொறுத்து அனுமதி வழங்கிடவும்,

| **சாலை அகலம் (அடி)** | **அனுமதிக்கப்பட்ட விளம்பரப் பதாகைகள் / விளம்பரத் தட்டிகள் அளவு** |
|---|---|
| (1) | (2) |
| 100 அடிக்கு மேல் | 15 அடி (உயரம்) X 24 அடி (அகலம்). |
| 60 முதல் 100 வரை | 12 அடி (உயரம்) X 20 அடி (அகலம்). |
| 40 முதல் 60 வரை | 10 அடி (உயரம்) X 16 அடி (அகலம்). |
| 20 முதல் 40 வரை | 8அடி (உயரம்) X 5 அடி (அகலம்). |
| 10 முதல் 20 வரை | 3 அடி (உயரம்) X 2.5 அடி (அகலம்). |
| சாலையின் மையத்தடுப்பில் | 4 அடி (உயரம்) X 2.5 அடி (அகலம்). |

விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் நடைபாதை ஓரமாக அமைக்க அனுமதி வழங்கும் பட்சத்தில் இருபுற சாலையின் நடுவில் (Centre Median) அமைக்கக் கூடாது. 10 அடிக்கும் குறைவாக நடைபாதை இருக்கும் சாலைகளின் இரண்டு புறங்களும் வைக்க அனுமதி வழங்கப்படமாட்டது. நடைபாதைகளின் குறுக்காகவோ அல்லது சாலையின் குறுக்காகவோ அமைக்கப்படக் கூடாது. நடைபாதை அல்லது சாலைக்கு இணையாக அமைக்கப்படவும்,

ஒரு விளம்பரப் பதாகை அல்லது விளம்பரத் தட்டிக்கும் மற்றொன்றுக்கும் இடையே குறைந்த பட்சம் 10 மீட்டர் இடைவெளியிலும், ஒரே நீளத்திலும் அமைக்கப்படவும்,

கல்வி நிறுவனங்கள், வழிப்பாட்டுத் தலங்கள், மருத்துவமனைகள், கல்வெட்டுகள், சிலைகள், சுற்றுலாத் தளங்கள் மற்றும் சாலை சந்திப்பு அல்லது சாலையின் ஓரத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவிற்குள் அமைக்கப்படக் கூடாது எனவும்,

விளம்பர பதாகைகளின் கீழ் பகுதியில் அனுமதி அளிக்கப்பட்ட நாள், அனுமதி எண், அனுமதி அளிக்கப்பட்ட அளவின் விவரம் மற்றும் அனுமதி வழங்கப்பட்ட கால அவகாசம், அச்சகத்தின் பெயர் குறித்து தவறாது குறிப்பிடப்பட வேண்டும். அனுமதிக்கப்பட்ட அளவைவிடவும் எண்ணிக்கையை விட கூடுதாலன அளவிலே எண்ணிக்கையிலே அமைக்கப்பட்டிருந்தால் அவற்றை அனுமதி இன்றி வைக்கப்பட்ட விளம்பர பதாகையாக கருதி அவை முற்றிலுமாக அகற்றப்படும் எனவும்,

அனுமதி வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்ற உடன் உடனடியாக விளம்பர பதாகைகள் மற்றும் விளம்பர தட்டிகள்அமைத்தவர்களே பொதுமக்கள் மற்றும் பாதசாரிகளுக்கு எந்த ஒரு இடையூறு இல்லாமல் முற்றிலுமாக அகற்றவும்,

விதிகளுக்கு மாறாக அமைத்தாலோ, பெருநகர சென்னை மாநகராட்சியிடமிருந்து முறையாக அனுமதி பெறாமல் அமைக்கப்பட்டாலோ சம்மந்தப்பட்டவர்கள் மீது சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 விதி எண்.326–I ன்படி உரிய சட்ட நடவடிக்கைகள் அல்லது அபராத தொகை ரூ.5,000/– அல்லது இரண்டும் சேர்த்து நடவடிக்கை மேற்கொள்ளவும்,

மேலும், டிஜிட்டர் பேனர் பிரிண்டிங் அச்சக சங்க உறுப்பினர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் அனுமதி பெற்று விளம்பரப் பதாகைகளை அச்சடிக்கும் பட்சத்தில், அவ்விளம்பரங்களின் கீழ்பகுதியில் அனுமதி அளிக்கப்பட்ட நாள், அனுமதி எண், அனுமதி அளிக்கட்ட அளவின் விவரம் மற்றும் அனுமதி வழங்கப்பட்ட கால அவகாசம், அச்சகத்தின் பெயர் ஆகியவற்றை தவறாது குறிப்பிட வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் வரும் விளம்பரங்களை அச்சடிக்காமல் தவிர்க்க வேண்டும் எனவும், மேலும் விளம்பரப் பதாகைகளின் கீழ் பகுதியில் எந்த ஒரு விவரங்களும் குறிப்பிடப்படாமல் அச்சடிக்கும் அச்சகத்தின் மீது விதிகளின்படி, அச்சகத்தின் உரிமத்தை ரத்து செய்ய உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், **சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 விதி எண்.326(BB) மற்றும் Tamil Nadu Urban Local Bodies (Permission for Erection of Digital Banner and Placards) Rules_2011ல் மேற்கண்ட விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன.**

**ஆனால் தற்பொழுது இதுதொடர்பாக, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் (வழக்கு எண்.33819/2018, நாள்: 19.12.2018) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து சாலைகளிலும் விளம்பரப் பதாகைகள் மற்றும் விளம்பரத் தட்டிகள் வைக்க இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை அனைவரும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக விளம்பரப் பலகைகள் மற்றும் தட்டிகள் அமைப்பவர்கள் மீது மிகக்கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார்.**

இக்கூட்டத்தில் இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், மாநகர காவல் இணை ஆணையாளர் (கிழக்கு) திரு.பாலகிருஷ்ணன், இ.கா.ப., அவர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள், திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., அவர்கள், சட்ட அலுவலர் திரு.எஸ்.ஜேக்கப் ராஜன் பாபு, மண்டல அலுவலர்கள் உட்பட பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**